பகுதி - II
Part - II

# வலிகாமம் வலயம்

# பொருளியல் - II

# Economics - II

| 21 | T | II |
|---|---|---|

**க.பொ.த உயர்தர மாதிரிப் பரீட்சை - 2020**

*General Certificate of Education (Adv. Level) Model Examination - 2020*

தரம் - 12

மூன்று மணித்தியாலம்
**Three Hours**

## பகுதி II

அறிவுறுத்தல் : உப பிரிவு "**அ**", "**ஆ**" ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

### உபபகுதி - 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

01)

(i). அமையச்செலவு என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? உற்பத்தியில் அமையச்செலவு பூச்சியமாகக் காணப்படும் சந்தர்ப்பங்களையும் குறிப்பிடுக?
(04 புள்ளிகள்)

(ii). வளங்களின் விளைதிறன் என்றால் என்ன? ஒரு நாடு தன்னிடமுள்ள வளங்களின் விளைதிறனை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?
(04 புள்ளிகள்)

(iii). சந்தைப் பொருளாதாரத்திலிருந்து கட்டளைப் பொருளாதாரம் எவ்வாறு வேறுபடுகின்றது?
(04 புள்ளிகள்)

(iv). சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் வெற்றிக்கு தனியாருரிமையும் சொத்துரிமைப் பாதுகாப்பும் ஏன் அவசியமானதாக உள்ளது?
(04 புள்ளிகள்)

(v). "ஒரு சமூகத்தின் நிகழ்கால நுகர்வின் தியாகத்தின் அளவிலேயே அச் சமூகத்தின் எதிர்கால பொருளாதார வளர்ச்சி வீதம் தங்கியிருக்கும்" இக் கூற்றின் நடைமுறைப் பொருத்தப்பாட்டினை பொருத்தமான வரைபடங்களை பயன்படுத்தி விளக்குக?
(04 புள்ளிகள்)

02)

(i). கேள்வி விதி என்றால் என்ன? அவ்விதிக்கு அடிப்படையாகவுள்ள இரண்டு விடயங்களையும் குறிப்பிட்டு அவற்றை விளக்குக?
(04 புள்ளிகள்)

(ii). சாதாரணபண்டம், இழிவுப்பண்டம் மற்றும் கிபன் பண்டம் ஆகியவற்றை வேறுபடுத்துக?
(04 புள்ளிகள்)

(iii). நெல்லின் நிரம்பல் அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் பட்டியல்படுத்துக?
(04 புள்ளிகள்)

(iv). நுகர்வோனின் வருமானம் 20%த்தால் அதிகரித்த போது X, Y, Z பண்டங்களின் கேள்வி முறையே 10%த்தால் வீழ்ச்சியடைந்தது, 30%த்தால் அதிகரித்து, 15%த்தால் அதிகரித்தது எனக்கருதுக?

அ) X,Y,Z பண்டங்களின் வருமான கேள்வி நெகிழ்ச்சியை கணிப்பிடுக?

(02 புள்ளிகள்)

ஆ) X,Y,Z பண்டங்களின் தன்மையை குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

(v) A என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| விலை (P) ரூபா | கேள்வித்தொகை (Qd) (அலகுகள்) | நிரம்பல் தொகை (Qs) (அலகுகள்) |
|---|---|---|
| 100 | 20 | 60 |
| 50 | 40 | 30 |

அ) A பண்டத்திற்குரிய கேள்வி, நிரம்பல் சார்புகளை உருவாக்கி சமநிலை விலை தொகையை காண்க?

(02 புள்ளிகள்)

ஆ) சமநிலை விலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி, நுகர்வோர் மிகை ஆகியவற்றை கணிப்பிடுக?

(02 புள்ளிகள்)

03)

(i). X என்ற பண்டத்தின் நிரம்பல் சார்பு Qs = -200 + 5p எனத்தரப்பட்டுள்ளது. X பண்டத்தின் உற்பத்தியாளர் மீது அலகுக்கு ரூ8 இனை வரியாக விதிப்பதாகக் கருதி பின்வரும் விலைகளில் வரிக்கு பின்னுள்ள நிரம்பல் தொகையை பதிவு செய்க?

| P | 4 | 8 | 12 | 16 | 20 | 24 |
|---|---|---|---|---|---|---|
| Qs | …… | …… | …… | …… | …… | …… |

(03 புள்ளிகள்)

(ii). இப்பண்டத்தின் சந்தைக்கேள்விச்சார்பு Qd = 600 - 5p எனத் தரப்படும் போது வரிக்குப் பின்னரான

அ) சமநிலை விலை, தொகை

ஆ) நுகர்வோன் மிகை

இ) உற்பத்தியாளன் மிகை

என்பவற்றைக் காண்க?

(05 புள்ளிகள்)

(iii) Y என்ற பண்டத்தின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் அலகொன்றுக்கு ரூ.10 மானியமாக வழங்குவதாகக் கருதுக. அலகுக்குரிய மானியத்தின் முழு அளவினாலும் Y பண்டத்தின் சமநிலை விலை வீழ்ச்சியடைந்தது. இத்தகைய நிலமை எவ்வாறு நிகழக்கூடும் என்பதனை வரைபடங்களின் துணை கொண்டு விளக்குக?

(04 புள்ளிகள்)

(iv) உச்ச விற்பனை விலை என்றால் என்ன? அதன் விளைவுகளையும் சுருக்கமாக விளக்குக?

(04 புள்ளிகள்)

(v) அரசாங்கம் நெல் உற்பத்தியாளர்களுக்கு ஆதரவை வழங்கும் நோக்கில் உத்தரவாத விலையை தீர்மானித்து அவ்விலையிலுள்ள மிகை நிரம்பலை தானே கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளது. இந்நடவடிக்கையின் விளைவுகளை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

(04 புள்ளிகள்)

**உபபகுதி - 'ஆ'**

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்க)

04)

(i). "குறைந்து செல்லும் விளைவு விதி" என்பதனை வரையறை செய்து அவ்விதி எவ்வாறு நிறுவனத்தின் செலவுகளை பாதிக்கும் என்பதனையும் தெளிவுபடுத்துக?

(04 புள்ளிகள்)

(ii). எல்லைச்செலவு, சராசரி மொத்தச் செலவு என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை விளக்குக?

(04 புள்ளிகள்)

(iii). அ) நிறைபோட்டிச் சந்தை ஆ) தனியுரிமைப் போட்டிச் சந்தை ஆகியவற்றின் பிரதான பண்புகளை பட்டியல்படுத்துக?

(04 புள்ளிகள்)

(iv). நிறைபோட்டி நிறுவனமொன்று X என்ற பண்டத்தினை ரூபா 50 விலையில் 400 அலகுகளை விற்பனை செய்கின்றது. அந்நிறுவனத்தின் மொத்தச் செலவு 25000 ரூபாவாகும். அந்நிறுவனத்தின் வெளியீடு பூச்சியமாகவுள்ள போது மொத்தச் செலவு 6000 ரூபாவாகும் எனவும் கருதுக. இந்நிறுவனம் தொடர்ந்தும் X பண்டத்தினை நிரம்பல் செய்ய முடியுமா? விளக்குக?

(04 புள்ளிகள்)

(v). மாற்றல் கட்டணம் என்றால் என்ன? ஒரு காரணி மாற்றல் கட்டணத்தை மட்டும் எப்போது தன் வருமானமாகக் கொண்டிருக்கும்?

(04 புள்ளிகள்)

05)

(i) "வர்த்தக சகடவோட்டம்" என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதிலுள்ள நான்கு கட்டங்களையும் சுருக்கமாக விளக்குக?

(04 புள்ளிகள்)

(ii) தேசிய கணக்கீட்டில் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படை விலை, கொள்வனவாளர் விலை ஆகியவற்றை வேறுபடுத்துக?

(04 புள்ளிகள்)

(iii) பின்வரும் விடயங்கள் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படுமா, இல்லையா என்பதை விளக்குக?

(அ) சுற்றுலா ஹோட்டலொன்று வெளிநாடொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட, கொள்கலனில் அடைக்கப்பட்ட ரூ.10 மில்லியன் பெறுமதியான உணவுப் பதார்த்தங்களைக் கொள்வனவு செய்தல்.

(ஆ) முதலீட்டாளரொருவர் பிரதான வணிக வங்கியொன்றில் ரூ.30 மில்லியன் பெறுமதியான பங்குகளைக் கொள்வனவு செய்தல்.

(இ) இல்லத்தரசி ஒருவர் நடப்பு வருடத்தில் தனது வீட்டுத் தோட்டத்தில் மரக்கறிகளைப் பயிரிடுகிறார். அறுவடை முழுவதும் வீட்டு நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(ஈ) மோட்டார் வாகன விற்பனையாளர் ஒருவர், பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றை விற்பதன் மூலம் தரகுப் பணத்தைப் பெறுகிறார்.

(04 புள்ளிகள்)

(iv) பின்வருவது கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றிற்கான பேரினப் பொருளியற் தரவுகளின் பட்டியலாகும்.

| வகை | பெறுமதி (பில்லியன் ரூபாயில்) |
|---|---|
| தனியார் நுகர்வு | 70,000 |
| அரசாங்க கொள்வனவுகள் | 20,000 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 21,000 |
| இருப்புகளிலான மாற்றம் | 3,000 |
| ஏற்றுமதிகள் | 24,000 |
| இறக்குமதிகள் | 30,000 |
| தேறிய வெளிநாட்டிலிருந்தான முதன்மை வருமானம் | - 4,000 |
| தேறிய வெளிநாட்டிலிருந்தான தனியார், அரச மாற்றல்கள் | 5,000 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ. சந்தை விலைகளில் மொத்த உள் நாட்டு உற்பத்தி.

ஆ. சந்தை விலைகளில் மொத்தத் தேசிய வருமானம்.

இ. செலவிடத்தக்க மொத்தத் தேசிய வருமானம்.

ஈ. மொத்த தேசிய சேமிப்பு. (08 புள்ளிகள்)

06)

(i) சமநிலைத் தேசிய வருமானத்தின் பண்புகளை பொருத்தமான வரைபடங்கள் மூலம் வெளிப்படுத்துக?

(04 புள்ளிகள்)

(ii) பணவீக்க இடைவெளியையும், சுருக்க இடைவெளியையும் பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

(04 புள்ளிகள்)

(iii) முதலீட்டுப் பெருக்கி என்பதன் கருத்தை சுருக்கமாக விளக்குக? (04 புள்ளிகள்)

(iv) பொருளாதாரம் ஒன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் சில பின்வருமாறு தரப்படுகின்றன.

(சகல இலக்கங்களும் பில்லியன் ரூபாவில்)

தன்னிச்சையான நுகர்வு = 50

திட்டமிட்ட முதலீடு = 150

அரசாங்கக் கொள்வனவுகள் = 100

தேறிய ஏற்றுமதிகள் = -75

எல்லை நுகர்வு நாட்டம் = 0.75

இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை நிர்ணயிக்குக.

(04 புள்ளிகள்)

(v) கருதுகோள் பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் வருமாறு?

| | | |
|---|---|---|
| மொத்த தேசிய வருமானம் | (Y) | = 8000 பில்லியன் ரூபா |
| செலவிடத்தக்க தேசிய வருமானம் | ($Y_d$) | = 7400 பில்லியன் ரூபா |
| தனியார் நுகர்வு | (C) | = 7100 பில்லியன் ரூபா |
| அரச பாதீட்டுப் பற்றாக்குறை | ($B_D$) | = 200 பில்லியன் ரூபா |
| அரச நடப்பு மாற்றல்கள் | ($T_R$) | = 50 பில்லியன் ரூபா |
| வர்த்தக மீதி | (TB) | = -300 பில்லியன் ரூபா |

இப் பொருளாதாரத்தின்

அ) அரசின் வரி வருமானம் (T)

ஆ) தனியார் முதலீடு (I)

எவ்வளவாகக் காணப்படும்?

(04 புள்ளிகள்)